# மாத்தறை பிரதேச சபை
# மாத்தறை மாவட்டம்

----------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 20 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமையகத்தின் அறிக்கை 2018 ஜூலை 31 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து, மாத்தறை பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்கு கிடைத்திருந்த காணி ஒன்றின் பெறுமதியினை மூலதனப்படுத்தும் போது ரூபா 1,800,000 தொகை குறைவாகவும் வேறு ஒரு காணியின் பெறுமதி ரூபா 400,000 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) சபைக்குச் சொந்தமான ரூபா 19,111,217 தொகை பெறுமதியான 11 காணிகளை நிலையான சொத்துக்கள் என மூலதனப்படுத்தியிருக்காததுடன் 03 ஏக்கர்கள், 31.8 பர்சஸ் கொண்ட 03 காணிகளின் பெறுமதியினை மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 270,767 தொகை பெறுமதியான தளபாடங்கள் மற்றும் உபகரணங்களை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஈ) முன்னைய ஆண்டு தொடர்பாக ஒப்பந்த வேலைக்காரர்களுக்கு திருப்பி செலுத்த வேண்டிய 10 சதவீதத்திற்கான 38 தடுப்பு வைத்தல் வைப்புக்களின் பெறுமதி ரூபா 2,527,618 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(உ) நிர்மாண வேலைகள் தொடர்பாக செலுத்த வேண்டிய 10 சதவீத தடுத்து வைத்தல் வைப்புக்களின் பெறுமதி ரூபா 507,312 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் போது கடன் அடிப்படையில் பெற்றிருந்த சேவைகளுக்காக செலுத்த வேண்டிய ரூபா 396,293 இற்கான பெறுமதி ஆண்டிற்கான செலவுகள் மற்றும் கடன்கொடுத்தோர் என கணக்கீடு செய்திருக்கவில்லை.

(எ) ரூபா 107,477 தொகை பெறுமதியான 38 களஞ்சியப் பொருள் விடயங்களின் பெறுமதி கணக்குகளில் இருந்து கைவிடப்பட்டிருந்தது.

(ஏ) முன்னைய ஆண்டுகள் தொடர்பாக கிடைக்க வேண்டிய ரூபா 10,043,702 தொகைக்கான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 49,300,228 தொகைக்கான முத்திரைக் கட்டண வருமானத்தை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டின் போது சபை நிதியத்திலிருந்து பூர்த்தி செய்திருந்த கெகனதுர வாராந்த சந்தை மலசலகூட முறைமைக்காக செலவிடப்பட்ட ரூபா 685,989 இற்கான தொகையினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஒ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 05 நிர்மாண வேலைகள் தொடர்பாக கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் ரூபா 84,600 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(ஓ) 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஓய்வூதிய நிதியத்திற்காக செலுத்த வேண்டிய ரூபா 39,614 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஔ) மீளாய்வாண்டிற்காக செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணம் தொடர்பாக கணக்குகளில் ஏற்பாடுகள் செய்திருக்கவில்லை.

### 1.3.2 எதிர்பாராத பொறுப்புக்கள்

சபையின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள ரூபா 2,704,750 தொகை பெறுமதியான காணியின் உரிமை தொடர்பாக பிரதேச சபைக்கு எதிராக மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

நிதிக்கூற்றுக்கள் காணப்படுகின்ற 03 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் துணைப் பதிவேடு / அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே சமமின்மைகளின் கூட்டுத்தொகை ரூபா 1,672,647 தொகையாகும்.

### 1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### (அ) பெற வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(i) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 120,825,956 தொகைக்கான நிலுவை ஏனைய வருமானம் மீதியில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 77,912,707 தொகையான 06 மீதிகள் அடங்கியிருந்தன.

(ii) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அறவிடக்கூடிய துணைச் சேவையின் கீழ் மாத்தறை மாநகர சபையில் இருந்து அறவிடப்பட வேண்டிய தொகை என ரூபா 1,942,225 காணப்பட்ட போதிலும், மாத்தறை மாநகர சபையின் நிதிக்கூற்றுக்களில் அவ்வாறான மீதியொன்று காட்டப்பட்டிருக்காமையால் இத்தொகை அறவீடு செய்வதில் நிச்சயமற்றதன்மை ஒன்று காணப்பட்டது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 54,827,045 தொகையான மூலதன கடன் கொடுத்தோர் மீதியில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 43,058,756 தொகைக்கான 13 வகையான மீதிகள் அடங்கியிருந்தன.

(ii) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 10,267,338 தொகையான திருப்பி செலுத்த வேண்டிய பலவீன வைப்புக்களின் பெறுமதியில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 8,173,131 இற்கான மீதியொன்றும் அடங்கியிருந்தது.

### 1.3.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 133,891,101 தொகைக்கான 16 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்தல் மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.6 இணக்கமின்மைகள்

#### 1.3.6.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

கீழே விபரிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| (i) விதி 33 | வீதவரி செலுத்துவதை புறக்கணிக்கும் நபர்கள் தொடர்பாக அட்டவணை மற்றும் ஆதனங்களை தடை செய்யும் எழுத்தாணை அட்டவணை என்பன தயாரித்திருக் கவில்லை. |
| (ii) விதி 141 | நிர்மாண வேலைகள் தொடர்பாக 10 சதவீதம் தடுத்து வைத்தல் பணம் வைப்புக்கள் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை. |
| (iii) விதி 193 | பாதீட்டு மற்றும் குறைநிரப்பு அங்கீகாரச் செலவுகளுடன் செலவு விடயங்களில் உள்ளவாறாக செலவுகளை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பாற்றாக்குறை தொடர்பான காரணங்களை காட்டும் கூற்றொன்று கணக்குகளுடன் சமர்த்திருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| | (iv) விதி 217 மற்றும் 218 | சபைக்கு சொந்தமான அனைத்து காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பான பதிவேடொன்று இலக்கம் பீ.எஸ். 46 இலக்கம் கொண்ட படிவத்தின் பிரகாரம் பேணப்பட்டிருக்காததுடன், வருடாந்த கணிப்பீடும் நடாத்தப்பட்டிருக் கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| | (i) நி.பி. 137(5) | வழங்கல் ஒன்று தொடர்பாக கொடுப்பனவு செய்யும் போது அந்த பண்டங்கள் பிழையற்ற முறையில் பெற்றுகொண்டன என உறுதிப்படுத்தா கொடுப்பனவுகள் அங்கீகரிக்கப்பட்ட வேண்டுமெனினும், குறிப்பிட்ட பண்டங்கள் கிடைத்த தெனவும், அவை ஒப்படைக்கப்பட் டனை சான்றுபடுத்தப்படாமல் 89 டீ சேட்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 55,000 தொகை ஒன்று செலவிடப்பட்டிருந்தது. |
| | (ii) நி.பி. 396 (இ) | வழங்கப்பட்டு ஆனால் கொடுப்பனவுக்காக சமர்பிக்கப்படாத 06 மாத காலத்தை கடந்துள்ள ரூபா 602,033 தொகை பெறுமதியான 06 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திக்கவில்லை. |
| | (iii) நி.பி. 565 (4) | கூட்டுத்தொகை ரூபா 8,876,677 தொகைக்கான பொது வைப்பு கணக்கில் ஒவ்வொரு கணக்கு மீதிகளும் உருவாகிய முறையை இனங்கண்டு முன் கொண்டு வந்திருக்கவில்லை. |
| (இ) | 2014 திசெம்பர் 30 ஆம் திகதிய 2014/3(i) இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | சுற்றறிக்கை அறிவுரைகளுக்கு பொருத்தமற்ற முறையில் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு ரூபா 13,750 இற்கான தொலைபேசி படி ஒன்று செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கை | சபைக்கு சொந்தமான 18 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 36,726,325 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 34,464,557 ஆகக் காணப்பட்டது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

(அ) 2013 ஜனவரி 01 திகதி முதல் செயற்படாது காணப்படும் வங்கி நடைமுறை கணக்கு தொடர்பாக வங்கி இணக்கக்கூற்றுக்களின் பிரகாரம் வழங்கப்பட்ட ஆனால் கொடுப்பனவுக்காக வங்கிக்கு சமர்பிக்கப்படாத ரூபா 601,501 இற்கான காசோலையினை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) (i) சபைக்கு சொந்தமான பொது நிதி வங்கி கணக்கில் இருந்து வழங்கப்பட்ட ஆனால் 03 வருடம் முதல் 05 வருட காலம் வரை வங்கிக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருக்காத ரூபா 5,598 இற்கான தொகை மற்றும் நீர் கணக்கு தொடர்பாக ரூபா 7,088 இற்கான தொகை 05 வருட காலம் முதல் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வங்கி கணக்கிற்கு மேலதிகமாக வைப்பு செய்தல் என கிடைத்திருந்த பொது கணக்கில் ரூபா 80,819 இற்கான தேவையினை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) பொது காசுக் கணக்கில் ரூபா 83,550,811 இற்கான இறுதி மீதி மற்றும் நிர்மாண வேலைக் காசுக் கணக்கில் ரூபா 5,616,053 இற்கான இறுதி மீதியின் தேவைக்கு உகந்த தொகையினை தடுத்து வைத்து மீதித் தொகையை நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்து வட்டி வருமானம் ஒன்றினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.3 வருமான நிருவாகம்

## 2.3 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| வருமான மூலம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 5,409,360 | 6,660,213 | 4,957,468 | 5,731,941 | 3,948,310 | 4,978,655 | 3,407,157 | 4,029,196 |
| வாடகை | 2,143,100 | 1,670,214 | 1,701,914 | 687,985 | 2,798,100 | 2,055,658 | 2,113,635 | 719,685 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 1,423,920 | 2,496,939 | 2,360,686 | 241,613 | 1,500,000 | 2,490,459 | 2,402,999 | 105,360 |
| ஏனைய வருமானங்கள் | 27,320,750 | 42,769,981 | 33,769,981 | 41,615,076 | 32,827,500 | 35,373,346 | 212,419,746 | 32,615,076 |
| மொத்தம் | 36,297,130 | 53,597,347 | 42,790,049 | 48,276,615 | 41,073,910 | 44,898,118 | 220,343,537 | 37,469,317 |

**2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை**

மீளாய்வாண்டின் போது மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த வருமானம் ரூபா 36,297,130 தொகையாகக் காணப்பட்டதுடன், சிட்டை இடப்பட்ட வருமானம் ரூபா 53,597,347 ஆக காணப்பட்டது. ரூபா 37,469,317 தொகையாகக் காணப்பட்ட ஆரம்ப நிலுவையுடன் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகை ரூபா 91,066,664 தொகை எனினும், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 42,790,049 தொகையாக இருந்தமையால் வருட இறுதியில் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா 48,276,615 தொகை ஆக காணப்பட்டது.

**2.3.3 வீதவரியும் வரியும்**

**(அ) வீதவரி**

ஆரம்ப நிலுவை மீதி ரூபா 4,017,281 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 4,990,889 தொகை ஆண்டிற்கான சிட்டையிடல் உடன் ரூபா 9,008,170 தொகை அறவிடப்படவேண்டியிருந்தது. மொத்த அறவீடுகள் ரூபா 3,217,597 தொகை ஆகையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 5,790,573 தொகை வரை நிலுவை மீதி வளர்ச்சியடைந்திருந்தது.

**(ஆ) ஏக்கர் வரி**

ஆரம்ப ஏக்கர் வரி நிலுவை மீதி ரூபா 11,915 தொகையாக காணப்பட்டதுடன், ஆண்டிற்கான சிட்டையிடல் (கட்டணம் மற்றும் தண்டத்துடன்) ரூபா 2,906 தொகையாக காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 240 தொகையாக காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 14,581 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

**2.3.4 வாடகை**

ஆரம்ப நிலுவை மீதி ரூபா 390,635 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 1,408,526 தொகையான ஆண்டிற்கான சிட்டை இடல் உடன் ரூபா 1,799,161 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. மொத்த அறவீடுகள் ரூபா 1,440,226 தொகை ஆகக் காணப்பட்டமையினால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 358,935 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

**2.3.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்கவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 7,500,000 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 29,000,000 தொகை ஆகும்.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்களின் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்துதலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டுபிடிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) எதிர்பாக்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தை கொள்ளப்படாமை**

-----------------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சுற்றாடல் வலையம் ஏற்படுத்துவதற்காக தென் மாகாண சுற்றாடல் அமைச்சிலிருந்து 2017 நவம்பர் 27 ஆம் திகதி சபைக்கு கிடைத்திருந்த ரூபா 553,900 தொகை மற்றும் உத்தியோகத்தர்களுக்கு தேவையான சீருடை வழங்குவதற்காக 2017 ஆகஸ்ட் 30 ஆம் திகதி தனியார் நிறுவனம் ஒன்றிலிருந்து வெகுமதியாக கிடைத்திருந்த ரூபா 75,000 இற்கான தொகை குறிப்பிட்ட விடயத்திற்காக பயன்படுத்தப்படாமல், பொது வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

(ii) பல வருட காலமாக முன் கொண்டு வரப்பட்டு காணப்படும் கட்டிட அபிவிருத்தி நிதியத்திற்கு அனுப்பப்பட வேண்டிய ரூபா 40,200 தொகை பொது வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

(iii) மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் பிரகாரம் சபை நிதியத்தில் இருந்து ரூபா 12,250,000 தொகைக்கான 18 வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதற்காக திட்டமிட்டிருந்த போதிலும், ரூபா 1,569,212 தொகைக்கான 04 வேலைத்திட்டங்கள் மாத்திரம் செயற்படுத்தப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் பாதீட்டில் அடங்கியிருக்காத கூட்டுத்தொகை ரூபா 3,315,849 தொகைக்கான 05 நிர்மாண வேலைகளை சபை நிதியத்திலிருந்து செயற்படுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

-------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டிற்கான குப்பை சேர்ப்பதற்காக சம்பளம் மற்றும் படிகள், வாகன மற்றும் எரிபொருள் இற்காக ரூபா 7,830,177 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் சபையின் அதிகாரம் பிரதேசத்தில் நாளாந்தம் சேகரமாகும் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கான முறையான நடைமுறை ஒன்று இன்மையால் 2013 ஆண்டின் பின்னர் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்குவதை நிராகரித்திருந்தது.

(ii) முறைசாரா விதமாக குப்பைகளை குவிக்கப்படுகின்றமையினால், சேதனப் பசளை நிலையத்தைச் சுற்றியுள்ள பிரதேச மக்களின் எதிர்பின் காரணமாக 2016 ஜூன் 13 திகதி முதல் சேதனப் பசளை உற்பத்தி நிறுத்தப்பட்டிருந்ததுடன், ரூபா 1,114,493 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த சேதனப் பசளை நிலையமும் விளைவற்று காணப்பட்டது.

(iii) மீளாய்வாண்டின் போது நிறுவனங்களை எதிலிருந்தும் குப்பை வரி அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

-----------------------------------------------------------

நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்காக உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத்திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது ரூபா 277,500 இற்கான முற்பணம் வழங்கியிருந்த போதிலும் அம் முற்பணம் முறைசார் விதமாக முற்பணப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 ஆண்டிற்கான போது சபையினால் 2069 வீதி விளக்குகள் பராமரிப்பதற்கு ரூபா 593,795 தொகை செலவிடப்பட்டிருந்தது. மின்சார சபையினால் அங்கத்தவர்களின் எண்ணிக்கையை விட மேலதிகமாக சபையினால் பொருத்தப்பட்டிருந்த 1,668 வீதி விளக்குகளுக்காக ரூபா 396,795 இற்கான தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. மின் குமிழ்கள் மற்றும் துணைக் கருவிகள் பொருத்துதல் தொடர்பான முறையான பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

**3.3 மனித வள முகாமைத்துவம்**

**(அ) ஊழியர் வெற்றிடங்களும் மிகைகளும்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பதவியணித் திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட பதவிகளில் 02 வெற்றிடங்களை நிரப்புவதற்காகவும், 08 மிகைப் பதவியணிகளை முறைப்படுத்திக் கொள்வதற்கு மீளாய்வாண்டு இறுதிவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) ஆரம்ப நிலை பதவிகளுக்காக 2014 ஆண்டு முதல் சேர்க்கப்பட்டிருந்த 16 பேரில், உரிய கடமைகளை நிறைவேற்றிக் கொண்டிருக்காததுடன், மீளாய்வாண்டிற்காக மாத்திரம் சம்பளம் மற்றும் படியாக சபை நிதியத்திலிருந்து ரூபா 6,279,194 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**3.4 செயற்பாட்டு திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) (i) நகர அபிவிருத்தி அதிகார சபையின் 1992 செப்டம்பர் 30 ஆம் திகதிய 5/02/1/10(ii) இலக்கங் கொண்ட 06 ஆம் இலக்க அபிவிருத்தி பிரமாணங்களின் பிரகாரம் 01 ஹெக்டயர் அளவை விட கூடுதலான காணிகள் துணைப் பங்கீடு செய்யும் போது, சபைக்கு அறவிடப்பட வேண்டிய 10 சதவீத காணிப் பகுதியாக 03 ரூட்கள் 05 பர்சஸ்கள் குறைவாகப் பெறப்பட்டிருந்தது.

(ii) பிரதேச சபைச் சட்டத்தில் பிரிவு 154(1) இன் பிரகாரம் அதிகார பிரதேசத்தில் விற்பனவு செய்யப்படும் காணிகளில் விற்பனவு விலையில் 1 சதவீத வரி சபைக்கு செலுத்த வேண்டியிருந்த போதிலும் விற்பனவு செய்திருந்த 11 காணிகளைச் சேர்ந்த 166 காணித் துண்டுகளில் இருந்து சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 1,475,023 இற்கான தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நாவிமன தெற்கு மிரிஸ்வத்த விளையாட்டுத் திடலின் வேலி நிர்மாணிப்பதற்காக ரூபா 2,989,068 இற்கான செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட காணியை சபைக்கு உரித்தாக்குவதற்கு 2018 மே 15 வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காணிகள் மற்றும் கட்டிடங்கள் எனக் காட்டப்பட்டிருந்த ரூபா 78,605,147 தொகை பெறுமதிக்கான 103 காணித் துண்டுகளின் பெறுமதி சபைக்கு உரித்தாக்கிய பின்னர் பெறுமதி மதிப்பீடு செய்திருக்கவில்லை.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 விளைவற்ற / குறைபயன்பாட்டு சொத்துக்கள்**

**(அ) மோட்டார் வாகனங்களும் வண்டிகளும்**

சபைக்குச் சொந்தமான ரூபா 9,984,453 தொகை பெறுமதியான 04 வாகனங்கள் மீளாய்வாண்டின் போது எதுவித தேவைக்கும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இயந்திரங்கள் மற்றும் இயந்திரோபகரணங்கள்**

ரூபா 6,009,602 தொகைக்கான டிப்பர் வண்டி ஆண்டின் போது 783 கி.மீற்றர் மற்றும் ரூபா 5,000,000 தொகைக்கான பெக்கோ லோடர் இயந்திரம் ஆண்டின் போது 473 கி.மீ. மாத்திரம் ஓட்டப்பட்டிருந்தது. பதிவு இலக்கம் இன்றிய ரூபா 400,000 தொகைக்கான பாதை தகர்க்கும் இயந்திரம் ஆண்டின் போது செயற்படாது காணப்பட்டது.

**3.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

நகர அபிவிருத்தி அதிகார சபையினால் ரூபா 7,198,400 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த கெகணதுர சந்திக்கு அண்மையில் அமைந்துள்ள பிரதான பஸ் தரிப்பு நிலையத்திற்காக சபை நிதியத்தில் இருந்து ரூபா 1,000,000 தொகை செலவிடப்பட்டிருந்த அதனை போதிலும், ஆக்கபூர்வமான கருமம் எதற்கும் பயன்படுத்தியிருக்கவில்லை.

**3.7 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

பெக்கோ லோடர் இயந்திரத்தை வாடகைக்கு கொடுத்ததன் மூலம் மற்றும் செயற்படாதிருப்பதற்கு முன்னர் பாதை தகர்க்கும் இயந்திரத்தை வாடகைக்கு கொடுப்பதன் மூலம் கிடைக்க வேண்டியிருந்த ரூபா 264,332 இற்கான தொகை கடந்த 05 ஆண்டுகளில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மற்றும் உள்ளபடியான வருமானங்கள் மற்றும் செலவுகளிடையே கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(அ) 08 செலவு விடயங்களில் கூட்டுத்தொகை ரூபா 20,267,317 தொகைக்கான சேமிப்பு காணப்பட்டதுடன், அப்பெறுமதி 14 சதவீதம் முதல் 100 வரையான வீச்சில் காணப்பட்டது.

(ஆ) 03 வருமான விடயங்களில் ரூபா 11,155,863 இற்கான பிரதிகூலமான முரண்களின் கூட்டுத்தொகை காணப்பட்டதுடன், அப்பெறுமதி 11 சதவீதம் முதல் 23 வரையான வீச்சில் காணப்பட்டது.

(இ) 03 வருமான விடயங்களின் அனுகூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 18,287,607 தொகையாக காணப்பட்டதுடன், அப்பெறுமதி 23 சதவீதம் முதல் 126 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

**4.2 உள்ளக கணக்காய்வு**

இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 133 மற்றும் 134 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 பெப்ரவரி 24 திகதிய தபபா/யஹ/01/ந.ச.லே இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் போதியளவு அகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரிக்கும் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் கலந்துரையாடி இணக்கத்தைப் பெற்றிருக்காததுடன், உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

2009 ஜூன் 09 திகதி DMA/29(i) இலக்கம் கொண்ட முகாமைத்துவ சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதிவரை 02 குழுக் கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

**5 முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன், பின்வரும் கட்டுபாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) நிலையான சொத்துக்கள்
(ஆ) வருமானம் நிருவாகம்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) ஒப்பந்த வேலை நிருவாகம்
(உ) கணக்கீடு